யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 72 பிரசோற்பத்தி தை 24 (07 - 02 - 1992) வெள்ளி


## இலங்கைக்கு நிதியுதவிவழங்க உதவிவழங்கும் நாடுகேள் தயார்!

இன்று பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசுக்கு நிதியுதவியை வழங்க உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாநாட்டில் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விவாதிக்கப்படினும் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் உலகவங்கி பரிந்துரைசெய்த, தனியார்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# ராணுவ காவலரண்கள் மீது நொச்சிமோட்டையில் தாக்கு!

## 3 அரண்கள் முற்றாக அழிந்தன அதிகாரி உட்பட 5 படையினர் பலி

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் படையினரின் மூன்று காவலரண்கள் முற்றாக அழிந்தன. ராணுவ அதிகாரி ஒருவரும் நான்கு சிப்பாய்களும் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன் தினமிரவு 12.15 மணியளவில் நொச்சிமோட்டைப் பகுதியில் தொடராக அமைந்திருந்த படையினரின் காவலரண்கள் மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்

அரைமணி நேரத்தாக்குதலின் பின் காவலரண் தொடரில் 3 காவலரண்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டன. காவலரணிலிருந்த 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் முகாமுக்குத்

...04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நொச்சிமோட்டை காவலரண்கள் மீதான தாக்குதலின் பின் அழிக்கப்பட்ட காவலரண்களிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

- ★ பி.கே இலகு இயந்திர துப்பாக்கி - 01
- ★ ரி 56 1 - 03
- ★ ரி - 56 11 - 01
- ★ பி.கே துப்பாக்கி பைபோட் - 01
- ★ பி.கே மேலதிகசுடுகுழல்-01
- ★ ரவுண்ட்ஸ் - 752

...04 ஆம் பக்கம் பார்க்க

## இஸ்ரேலில் மனித உரிமை மீறல்:

## அரசியல் கோஷங்களை எழுதியோர் படையினரால் கொல்லப்பட்டனர்

இஸ்ரேலில் அரசியற்கோஷங்களை சுவர் ஒன்றில் எழுதிக் கொண்டிருந்த 27 பலஸ்தீனியர்களை இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர் என மனித உரிமை மீறல்கள் பற்றிய அமெரிக்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

இதேவேளை 1991 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் வெளி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மதிய உணவு முத்திரை: தகவல் விரைந்து அனுப்பக் கோரிக்கை

உரிய காலத்திற்குள் மாணவர் மதிய உணவு முத்திரைகள் சம்பந்தமான தகவல்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பாததினாலேயே மதிய உணவு முத்திரையை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்படுவதாக அமைச்சு அறிவித்துள்ளது

இத்தகவல்களை மாத முதல் வாரத்தினுள் அனுப்

...04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்ப் பயணிகள் கைது முறையிட்டவரும் கடத்தப்பட்டார்

அம்பாறையிலிருந்து கொழும்பு சென்ற தமிழ்ப் பயணிகள் கைது செய்யப்பட்டதும், இதுபற்றி பொலிசில் முறையிட்டவர் கடத்தப்பட்டதும் பற்றிய செய்தியொன்றை சர்வதேச மனித உரிமைச் சங்கம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இதுபற்றித் தெரிவித்திருப்பதாவது: அம்பாறையிலிருந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாருக்கு அகதிகள்

தமிழகத்திலிருந்து சுமார் 500 இலங்கை அகதிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி எம். வி. இராமானுஜம் என்ற கப்பலில் தலைமன்னார் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு

நொச்சிமோட்டை தாக்குதலில் லெப். ஐயனார் (நா. மகேந்திரன் சாளம்பைகுளம்). வினோதன் (செ சந்திரகுமார் முல்லைத்தீவு) ஆகிய போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

## பதுங்கியிருந்த படையினருடன் மட்டக்களப்பில் மோதல்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு பாவற்குளம் சேனையில் பதுங்கியிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலத்த மோதல் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் நடைபெற்ற கடும் மோதலையடுத்து படையினர் இழப்புக்களுடன் தப்பியோடினர். இம்மோதலில் செல்வன் (துறைநீலாவணை) வீரச்சாவு எய்தினார்.

## 5 இராணுவ படைப்பிரிவுகள் கிழக்கில் தேடுதலாம்!

கிழக்குப்பகுதியில் தற்போது இராணுவத்தின் 5 படைப் பிரிவுகள் நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கூட்டுப் படை தலைமையகத்தைச் சேர்ந்த லெப். கேணல் சந்திர சிறி நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை பிபிலை பகுதியில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தமக்கு தகவல் எதும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## வயலுக்குச் சென்றவர்கள் மீது பதுங்கியிருந்து படையினர் சூடு

மட்டக்களப்பு தும்பன்கேணிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று வயலுக்குச் சென்ற இரு பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்

இப் பகுதியில் படையினர் பதுங்கியிருந்தே இவ் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 20 பொதுமக்கள் அப்படையினரால் களுவாஞ்சிக்குடி முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

## பளை வைத்தியசாலையில் வயோதிபரின் சடலம்

பளைப்பகுதியில் உள்ள இத்தாவில் பாடசாலைக்கு முன்பாகவுள்ள பகிரிப்பு நிலையத்தில் இனம் தெரியாத வயோதிபரின் (65) சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சடலத்தின் அருகே நஞ்சு வெற்றுப் போத்தல் ஒன்றும் மேசன் வேலைக்குரிய ஆயுதங்

...04 ஆம் பக்கம் பார்க்க

## வெளியேறும் அகதிகள் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியா ஆர்வமாம்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப்படும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதில் இந்திய அரசு ஆர்வம் கொண்டுள்ளது என புனர்வாழ்வு அமைச்சின் செயலர் ஹிங்கிரி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

இதற்காக தற்போது அகதிகளை ஏற்றி வரப் பயன்படும் கப்பல்களிலும் விட பெரியளவிலான கப்பல்களைப் பயன்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கண்டெடுக்கப்பட்டது

திருநெல்வேலிச் சந்தையிலுள்ள மிதிவண்டி பாது

—04 ஆம் பக்கம் பார்க்க

## ★ கனேடிய கண்காணிப்புக்குழு கோரிக்கை

# கனேடிய அரசாங்கம் ஸ்ரீலங்காவுக்கான தனது உதவிகளை நேரடியாக வழங்கக் கூடாது!

ஸ்ரீலங்கா அரசுக்கு கனேடிய அரசு நேரடியாக வழங்கும் சகல உதவிகளையும் நிறுத்துமாறு கோருகிறது அண்மையில் இங்கு வந்து திரும்பிய கனேடிய கண்காணிப்புக்குழு. கனேடிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் எம். பீகள் இடம்பெற்ற இக்கண்காணிப்புக் குழு இங்கு எட்டு நாள் விஜயம் மேற்கொண்டு அண்மையில் கனடா திரும்பியது தெரிந்ததே.

ஸ்ரீலங்கா அரசு தனது மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை குறைக்கும் வரை அனைத்து சர்வதேச அமைப்புகளும் அவ்வரசுக்கு உதவி வழங்கக் கூடாது என அந்த கனேடியக் குழு கனடாவில் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

அநீதியான முறையிலான படுகொலை, விசாரணையின்றி கைதிகள் தடுத்து வைக்[illegible] ஆட்கள்

—[illegible]ம் பார்க்க

★ தமிழக தலைநகரில் தொண்டா

# இவ்வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு

இலங்கை இனப்பிரச்சினை இவ்வருட இறுதிக்குள் தீர்த்து வைக்கப்படுமென தான் நம்புவதாக கிராமிய தொழிற்துறை அமைச்சர் செள. தொண்டமான் இந்தியாவில் தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள இலங்கைப் பிரதி உயர் ஸ்தானிகராலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சுதந்திரதின விழா இடம் பெற்றது.

அவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

★ கண்டி விகாரையில் பிரதமர்

# தொண்டா என்ன எவர் சொன்னாலும்

## நிபந்தனையுடனேயே பேச்சு; அல்லது 'யுத்தமே!

தொண்டமான் அல்ல எவர் என்ன கூறினாலும் புலிகள் ஆயுதங்களைக் கைவிடும் வரை யுத்தம் தொடர்ந்தே தீரும் எனக் கண்டி உடுகம்பொல விகாரையில் உரையாற்றிய பிரதமர் டி.பி.விஜயதுங்க சூளுரைத்துள்ளார்.

ஆயுதத்தைக் கையளித்துவிட்டுப் பேச்சுக்கு வந்தாலே தவிர வேறுவழிகளில் போரை முடித்துச் சமாதானம் காண முடியாது.

இந்த நிபந்தனை ஏற்கப் படாதவிடத்து யுத்தத்தின் மூலமே இப் பிரச்சினைக்கு முடிவு காணப்படும் என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# இடம்பெயர்ந்த மாணவருக்காக 'அபிவிருத்தி நடவடிக்கைக் குழு,

இடம்பெயர்ந்திருக்கும் புங்குடுதீவு கொத்தணிப் பிரிவு மாணவ மாணவிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கெனவும் இவர்களின் கல்வியை விருத்தி செய்யவும் அபிவிருத்தி நடவடிக்கைக் குழு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் கொத்தணி அதிபர் க.பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் மேற்படி குழு தெரிவுசெய்யப்பட்டது (46)

## இளநீர்…:

நோயாளிகளுக்கு குளுக்கோஸ் ஏற்றுவதற்குப் பதில் இளநீர் கொப்பது சிறந்தது என அமெரிக்க டாக்டர் எச் பிரைஸ் தெரிவித்துள்ளார்.

இளநீரில் சுண்ணாம்பு, பொற்றாசியம், விற்றமின்பி, சோடியம் என்பன உண்டு என இவர் கூறுகிறார். (22)

# 17 1/2 கோடி ரூபா பெறுமதியான தங்கம் 1991 இல் பறிமுதல்!

தங்கத்தை நாட்டுக்குள் சட்ட விரோதமாகக்கொண்டு வரும் சம்பவங்கள் கடந்த ஆண்டு வெகுவாக அதிகரித்திருந்ததாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

1991 இல் கட்டுநாயக்காவில் மட்டும் இத்தகைய 575 தங்கக் கடத்தல் சம்பவங்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

இக் காலப்பகுதியில் 17 கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதாக கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கப்பகுதி தெரிவித்தது.

## அகதிகள் வெளியேறினர்!

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் கல்லூரிகள் சிலவற்றில் தங்கியிருந்த தீவக மக்கள் அங்கிருந்து தற்போது முற்றாகவெளியேறியுள்ளனர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், சன்மார்க்க மகா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறி இணுவில், கொக்குவில், நாவற்குழி பகுதிகளில் குடியமர்ந்துள்ளனர்.

நாவற்குழியில் தீவக மக்களுடன் குப்பிளான் பகுதி மக்கள் சிலரும் குடியிருப்பது குறிப்பிடத்தக்கது. (46)

# தீர்வையற்ற விற்பனைநிலையங்களில் பொருள்களின் விலை குறைப்பு!

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய தீர்வையற்ற விற்பனை நிலையத்தில் சகல பொருள்களினதும் விலைகள் நேற்றுமுதல் 5 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

துபாயிலுள்ள தீர்வையற்ற கடைகளில் விற்பனை செய்யப்படும் அதே விலைக்கே கட்டுநாயக்காவிலும் இனிமேல் பொருள்கள் விற்பனை செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் அரச ஊழியர்க்கு இனி 84 நாள்கள் பிரசவ விடுமுறை

பெண் அரச ஊழியர்களுக்கான பிரசவ லீவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி பெண் அரச ஊழியர் ஒருவர் 84 வேலை நாள்களைப் பிரசவ லீவாக இனிமேல் பெறமுடியும். தனியார்துறை, வங்கிபெண் ஊழியர்களும் இந்த 84 வேலை நாள் விடுமுறையைப் பெறுவர்.

தற்பொழுது அரச பெண் ஊழியர்களுக்கு சனி, ஞாயிறு, பொது விடுமுறை உட்பட 12 வாரங்கள் மட்டுமே பிரசவ விடுமுறையாக வழங்கப்பட்டு வருகின்றது.

# எல்லையை மீறி இந்தியாவுக்குள் ஊர்வலம் நடாத்த பாக், காஷ்மீர் முன்னணி முயற்சி!

எல்லையைக் கடந்து இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பிரதேசத்துக்குள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப் போவதாகப் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள இம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அப்துல்லா கான் அறிவித்துள்ளமை இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஒரு மோதலுக்கு வழிவகுக்கலாமென அஞ்சப்படுவதாக ஏஜென்ஸிச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் இந்த எல்லை மீறும் சம்பவத்தைத் தான் மேற்கொள்ளப் போவதாக அப்துல்லா கான் அறிவித்திருக்கிறார்.

ஆனால் இந்திய எல்லையைத் தாண்டி உள்ளே வரகான் முயன்றால் அது பாரதூரமான விளைவை ஏற்படுத்துமென இந்தியா எச்சரித்துள்ளது.

இந்த எல்லை மீறல், ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறு இந்தியா, பாகிஸ்தான் அரசைக் கேட்டுள்ளதுடன், அதனால் வரும் பின் விளைவுகளைப் பாகிஸ்தானே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் எச்சரித்துள்ளது.

## கண்காட்சி

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் பனை அபிவிருத்தி சபையினரால் நடாத்தப்பட்ட பயிற்சியில், பயிற்றப்பட்ட பெண்களினால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி நிலைய மண்டபத்தில் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரினால் 9 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கண்காட்சி ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு தினங்களும் மாலை ஐந்து மணி வரை நடைபெறும், திங்கள் மாலை 3 மணிக்குச் சிறந்த பொருள்களைத் தயாரித்த பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

# ஈராக் மீதான தடையை தொடர ஐ. நா. முடிவு!

ஈராக்கிற்கான பொருளாதாரத் தடையை மேலும் தொடர்வதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடிய போதே இம்முடிவு எடுக்கப்பட்டது.

☐ ஐ. நா. மேற்பார்வையாளர்களுக்கு பாக்தாத் ஒத்துழைப்புத் தராமை.

☐ எண்ணெய் ஏற்றுமதி குறித்த பேச்சை ஈராக் நிராகரித்தமை.

ஆகிய காரணங்களுக்காகவே இம்முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

# வெள்ளை நிற ஆசிரியர்களை நீக்கக்கோரி தென்னாபிரிக்கமாணவர்போராட்டம்

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டம் தற்பொழுது புது வடிவம் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்னாபிரிக்காவில் கறுப்பு நிற மாணவர்கள் தமது பாடசாலைகளில் கடமை புரியும் வெள்ளை நிற ஆசிரியர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரி தற்பொழுது புதிய போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இக் கோரிக்கையை வலியுறுத்தி நேற்று முன் தினம் அங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியதாகவும் தகவல் கிடைத்துள்ளது

# இராணுவ உதிரிப்பாகங்களை வாங்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அனுமதி!

பாகிஸ்தானுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்குவதை நிறுத்தி வைத்துள்ள போதிலும் வெடி பொருள்களையும், உதிரிப்பாகங்களையும் பணம் கொடுத்து வாங்குவதற்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தை அதன் தற்போதைய அளவில் தொடர்ந்தும் பராமரிப்பதற்காகவே இந்த அனுமதி வழங்கப்பட்டதாக அமெரிக்க வெளிவிவகாரப் பகுதி அறிவித்துள்ளது.

இந்த முடிவை அமெரிக்க செனட்டர்கள் சிலர் எதிர்த்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

## விழா

காரைநகர் கொத்தணி அமைப்பு நடாத்தும் திருவள்ளுவர் விழா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# அரசைஇராஜினாமாச்செய்யக்கோரி கொழும்பில் சுவரொட்டிகள்! படையினரே ஒட்டினர்?

அரசை உடனடியாக இராஜினாமாச் செய்யுமாறு கோரும் சுவரொட்டிகள் கொழும்பு மாநகரின் சில முக்கிய பகுதிகளில் இவ்வார ஆரம்பத்தில் திடீரெனக் காணப்பட்டதாகக் கொழும்பிலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இச்சுவரொட்டிகள் பாதுகாப்புப் படையிலுள்ள சில பிரிவினரின் ஒத்துழைப்புடனேயே ஒட்டப்பட்டிருக்கலாமென தற்பொழுது சந்தேகிக்கப்படுகிறதாம்.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் வற்புறுத்தலை அடுத்து கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படை அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்க அரசு முயன்றதையடுத்து அதன் எதிரொலியாக படையினருக்குள் ஒரு பிரிவினர் அரசுக்கு எதிராக செயற்பட முயன்றுள்ளமைக்கும் இச்சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாமெனக் கருதப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

# தென்பசுபிக் தீவுகளுக்கு வடபகுதி பனம் விதைகள்!

தென் பசுபிக்கில் உள்ள ஹெபேற்றிக் தீவுகளுக்குப் பனை விதைகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பனம் பொருள் அபிவிருத்திச்சபை கடந்த டிசம்பரில் இந்த ஏற்றுமதியை ஆரம்பித்தது.

பனை மரத்தை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டுள்ள பல நாடுகளுக்குப் பனை வித்துக்களை வழங்குவதில் இலங்கை முக்கியமான இடத்தை வகிக்கிறது எனத் தோட்டத் தொழிற்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் சில நாடுகளுக்கும் இங்கிருந்து பனை வித்துக்கள் அனுப்பப்படவுள்ளதாகவும் வடபகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்தரக விதைகளே ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜேர்மனியில் அகதிகள் குவிவதால் இனப்பிரச்சினைதீராது ஜேர்மன் அதிபர்

ஜேர்மனிக்கு தமிழ் அகதிகள் வந்து குவிவதன் மூலம் இலங்கையில் இனப் பிரச்சினையை தீர்த்துவிட முடியாது என ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் பிரபல ஆங்கில சஞ்சிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் அகதிகள் பெருமளவில் ஜேர்மனிக்கு வந்து குவிவதைத் தவிர்த்து, உள்நாட்டிலேயே பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டுமெனவும் அவர் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

★ 'இந்தியா ருடே' தரும் புதிய தகவல்:-

கர்நாடகக் கலவரம்;

# தன் மீதான ஊழல் குற்றச்சாட்டை திசை திருப்ப பங்காரப்பா மேற்கொண்ட சதிமுயற்சியே!

## அவரின் பதவி விரைவில்காவிரியில் ஜல சமாதி ஆகலாம்

கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா தமிழர்களுக்கு எதிரான வன்முறையை தன் மீதான ஊழல் குற்றச்சாட்டைத் திருப்பும் நோக்கத்துடனேயே நடத்தினார் என்ற வகையில் 'இந்தியா ருடே' இதழ் புதிய தகவலினை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: "தன் பதவி ஊசலாடுவதால் கிளர்ச்சியால் ஏற்படும் கொந்தளிப்பில் குளிர்காயவே அவர் போராட்டத்தைத் துவக்கினாரோ என்று தோன்றியது.

ஆட்சிக் காலத்தில் அரைக்கிணறு தாண்டிய பங்காரப்பாவின் அரசு மீது கடும் ஊழல் குற்றச்சாட்டுகளை அதிருப்தியாளர்கள் சுமத்தியிருந்தார்கள் அவற்றில் சில:

★ கோடிக்கணக்கில் நிழல் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நிலக் கூட்டுறவுச் சங்கங்களின் மீது நடவடிக்கையை நிறுத்தியது. கே. எச். பாடீல் கூட்டுறவுத் துறையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

★ பெங்களூரில் எம். எஸ். ராமையை என்பவருக்குச் சொந்தமான 100 கோடிரூபா மதிப்புள்ள 61 ஏக்கர் நிலத்தை ஒழுங்குபடுத்துவதில் முறைகேடு.

★ சாராய மொத்த வியாபாரத்தை எடுத்துக் கொள்ள முந்தைய அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் காலாவதியாக விட்டது இந்த அரசு. இதனால் மறுபடியும் சாராய மன்னர்கள் கை மாறிய சரக்கை எக்கச்சக்கமாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மதுவரி இடையாது அரசுக்கு கோடிக்கணக்கில் நஷ்டம்.

முதல்வர், கர்நாடகத்தைப் பாதுகாக்கத் திறனற்றவர் என்று அறிவித்த பாடீல்' காவிரி நீர் தொடர்பாகத் தமிழகத்திற்கும், கர்நாடகாவிற்கும் இடையே பேச்சு வார்த்தை துவங்கு முன் அவரை நீக்க வேண்டும் எனக் கட்சி மேலிடத்தைக் கேட்டுக் கொண்டார்

ஆனால் மேலிடமோ நிலவரத்தை ஆழம் பார்த்தது. தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை ஏற்பாடு செய்வதாகக் கூறியதன் மூலம் புதிய சூழலில் சிக்கித் தவிக்கும் பங்காரப்பாவைக் கரையேற்றப் பிரதமர் கைகொடுத்தார்.

தமிழக முதல்வர் தமிழர்கள் மீதான கொலைத் தனமான தாக்குதலுக்கு பங்காரப்பாவே பொறுப்பு என்று கூறி முத்தரப்பு பேச்சு வார்த்தையில் அவருடன் அமர்ந்து பேச மறுக்கும் நிலையில் இவ்விவகாரம் சீக்கிரமே நிகழ்ந்துவிடக்கூடும், பங்காரப்பாவின் பதவி அநேகமாக காவிரியில் ஜலசமாதி ஆகலாம்.

இவ்வாறு மேற்படி இதழ் தெரிவித்துள்ளது.

## சைக்கிள் திருட்டு

பூட்டிய நிலையில் வீட்டிற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன,

யாழ் வைரோறிய வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வாரம் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## 3 ஆவது தொகுதி அகதிகள் இன்று திருமலை வந்தடைவர்

சென்னையிலிருந்து மூன்றாவது அணி அகதிகளை ஏற்றிவரும் கப்பல் நேற்று முன்தினம் திருமலையை நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பலில் மதுரை, நெல்லைகட்டப்பொம்மன், கன்னியாகுமரி, பெரியார் மாவட்டங்களில் தங்கியிருந்த 708 இலங்கையர்கள் திருமலைக்கு கூட்டி வரப்படுகிறார்கள்.

இக்கப்பல் இன்று திருமலையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# கைதான இளைஞர்கள் காணாமல் போவது பற்றி அரசு அறிந்தேயிருந்தது! ஐ. நா. குழு அறிக்கை

இலங்கையில் கடந்த காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்ட பலர் காணாமல் போனசம்பவங்கள் அரசுக்குத் தெரியாமல் நடக்கவில்லையென ஐ. நா. மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது.

1983-க்குப் பின்னர் இலங்கையில் ஆட்சிமுறைதந்த 12 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் பலர் அரச படையினரால் கைது செய்யப்பட்டதன் பின்னரே காணாமல் போயுள்ளனர்.

இவர்களைக் கைது செய்த படை அதிகாரிகள் எவர், கைது செய்யப்பட்டவர் எவர், அவர் எந்த வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டார் போன்ற விவரங்கள் அரசுக்குத் தெரிந்தே உள்ளன எனவும் ஐ. நா. மனித உரிமைக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இத்தகைய விவரங்கள் இன்னமும் அரசிடமேயுள்ளன. இது குறித்து அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கையெடுப்பதில் இலங்கை அரசுக்கு தடைகளேயில்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தடுப்புக்காவலில் உள்ளோரை வாரத்தில் 3தடவை பார்வையிடலாம்!

தெற்கில் தடுப்புக் காவலில் உள்ளவர்களை அவர்களது உறவினர்கள் இனிமேல் வாரத்தில் மூன்று தினங்கள் பார்வையிடமுடியுமென அறிவிக்கப்படுகிறது.

பிரதிவாரமும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் தடுப்புக் காவலில் உள்ளோரை அவர்களது நெருங்கிய குடும்ப உறவினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்படவுள்ளது

தடுப்புக் காவலிலுள்ள ஒருவரை அவரது தகப்பன் அல்லது தாய் அல்லது சகோதரன் அல்லது சகோதரி இவர்களில் எவராவது ஒருவர் மட்டுமே ஒரு தடவை பார்வையிடமுடியும்.

தடுப்புக் காவலிலுள்ளவர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதி அந்தந்தச் சிறைச்சாலை, அல்லது தடுப்புக்காவல் முகாம் அதிகாரிகளினால் வழங்கப்படும்.

## கொழும்பு மாநகரப் பகுதியில் தபால் விநியோகம் புதிய முறையில்

கொழும்பு மாநகரப் பகுதியில் தற்பொழுது கடமையில் உள்ள தபால் சேவகர்களில் சராசரி 110 பேர் தினமும் கடமைக்குச் சமுகமளிக்காது விடுமுறையில் நின்று விடுகிறார்களாம்.

இதனால் தொடர் மாடி வீடுகள், வீடமைப்புத்திட்டங்கள், கடைத்தொகுதிகள் என்பவற்றுக்கான தபால் விநியோகத்துக்கு புதிய திட்டமொன்றை நேற்றுமுதல் அஞ்சல் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது

இப்புதிய திட்டத்தின்படி மேற்குறிப்பிட்ட தொகுதியில் வசிப்போருக்கு இனிநேரடித் தபால் விநியோகம் கிடைக்காது அவர்களுக்கான தபால்கள் குறித்த மாடிவீட்டு அல்லது கடைத் தொகுதியிலுள்ள ஒரு பிரத்தியேக தபாற் பெட்டியில் சேவகர்களால் இடப்படும் முகவரியாளர்கள் தாமாகவே தமக்குரிய கடிதங்களை அந்த அஞ்சல் பெட்டியிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா தயாரித்த நீர்மூழ்கிக்கப்பல் இன்று வெள்ளோட்டம் விடப்படும்!

இந்தியாவில் முதன்முதலாகக் கட்டப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் இன்று வெள்ளோட்டம் விடப்படவுள்ளது

'ஐ என். எஸ் சலதி' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கிக் கப்பலை பம்பாய்த் துறைமுகத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் இன்று காலை வெள்ளோட்டத்துக்கு விடுவார்

டீசல் மின் சக்தியில் இயங்கும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் உலகின் முதற்தர நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு ஒத்த நவீன வசதிகளைக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# சுவையான செய்திகள்

## சட்டத்திலிருந்து தப்பிக்க . . .

பண்ணையில் விலங்குகளை வளர்ப்பது பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது விலங்குகளே பண்ணைக்குச் சொந்தக்காரர்கள் ஆவது பற்றியது.

ராஜஸ்தானில் உள்ள ஒருவர் தனது நிலங்களைக் குத்தகைக்கு விட்டிருக்கிறார். குத்தகை எடுத்திருப்பவர்களில் சிலர்; சோனியா என்ற அவரது செல்ல நாய், பினு என்ற அவரது அருமையான எருமை.

தன்னுடைய 450 ஏக்கர் நிலத்தைத் தன் குடும்பத்தின் பெயருக்குக் குத்தகைக்கு எழுதிய பின்னரும் மிச்சம் வருகிறது அதனால் நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பிக்கத்தான் இத்தனை ஏற்பாடு.

இதில் இன்னொரு விடயம்:- பினுவும், சோனியாவும் கணவன் மனைவியாகப் பதியப்பட்டுள்ளதுதான்,

## நகமும்சதையுமாகஎலியும்பூனையும்

எலியும் பூனையும், நகமும் சதையுமாக இருந்தால் எப்படி இருக்கும்? இருந்தால் என்ன, இருக்கின்றன. இந்தியாவின் மங்களூரில் ஒரு தொழிற்சாலையில் எலியும் பூனையும் நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகின்றன.

பூனை எலியைச் சாப்பிடுவதில்லை. மாறாக எலியுடன் சேர்ந்து சாப்பிடுகிறது. நம்ப முடியவில்லையா?

அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களின் மதிய உணவு வேளையின் போது இந்த வித்தியாசமான ஜோடி தவறாமல் விருந்துக்கு வந்து விடும் தொழிலாளர்கள் தமது உணவின் ஒருபகுதியை இவர்களுக்காக ஒதுக்கி வைத்து விடுவார்கள். இவர்களில் தளபதி எலியார் தான்.

## இரு உலகிற்கும் பொதுவாக . . .

கேரளத்திலுள்ள செங்கானூரைச் சேர்ந்த 76 வயது சமூக சேவகர் ஒருவர் தனது புதைகுழியைத் தானே தோண்டி வைத்திருக்கிறார். ஒவ்வொரு இரவும் அதனுள் படுத்துத் தூங்குகிறார். தினமும் காலை எழுந்து வேலைகளைப் பார்த்துவிட்டு இரவானதும் புதைகுழிக்கு வந்துவிடுவார் அவர்.

அவர் செய்வதில் நியாயம் இருக்கிறது. வீட்டு வாடகை அங்கு எக்கச்சக்கம், அவரால் சொந்தமாக ஒரு வீடும் கட்டிக் கொள்ள முடியவில்லை.

இதனால் அடுத்த கட்டத்திற்கு- மரணத்திற்குப் பிறகு வாழ்வதற்குத் தேவையான புதைகுழியை இப்போதே உருவாக்கிவிட்டார். எல்லாம் ரெடி; கையில் தேதி போட வேண்டியதுதான் பாக்கி.

## 'தன்னைத்தானே ஆளும் உரிமை மாகாண சபைகளுக்கு வேண்டும்'

தன்னைத்தானே ஆளும் உரிமை மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென கொழும்பு அதிமேற்றிராணியார் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ்மார்க்கஸ் பெர்னாண்டோ விடுத்தசெய்தியிலேயே இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

## நேற்றுக் காலை கல்முனையில். . -

நேற்றுக் காலை பூநகரிக் கல்முனையில் இருந்து தொடர்ச்சியாகக் கடற்பகுதியை நோக்கிச் சூட்டுச் சத்தங்களும், வெடிச்சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்த இச் சத்தங்களுக்குக் காரணம் தெரிய வரவில்லை குறிப்பிட்ட பகுதியில் இதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் ஒன்று சில நிமிடங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டதை அவதானிக்க முடிந்தது. (16)

## வத்திக்கானில் அன்னை திரேசா; பாப்பாண்டவரையும் சந்தித்தார்

இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த 82 வயதான அன்னை திரேசா நேற்று முன்தினம் வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருடன் அதிகாலைத் திருப்பணியில் கலந்துகொண்டதாக வத்திக்கான் வானொலி தெரிவித்தது-

அவர் பரிசுத்த பாப்பாண்டவரின் விசேட ஆசீரையும் பெற்றுக்கொண்டார்,

வைத்தியர்களின் ஆலோசனையையும் கேட்காது சிகிச்சைக் காலத்தைக் குறைத்துக் கொண்டு இவர் கலிபோர்னியாவிலிருந்து புறப்பட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

கலிபோர்னியாவிலிருந்து வத்திக்கான் செல்லும் வழியில் விமானத்தில் வைத்துப் பேட்டியளித்த அன்னை திரேசா 'பிறருக்கு உதவுவதைத் தாமதிக்க முடியாது, அதை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

அன்னை திரேசா சில தினங்களில் இந்தியா திரும்பவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்க யப்பான் 13 இலட்சம் டொலர் உதவி

உலக உணவுத்திட்டம் விடுத்த வேண்டுகோளை அடுத்து யப்பான் இலங்கையில் வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டோருக்கென 13 இலட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலரை உதவியாக அரசிடம் வழங்கியுள்ளது.

தனது உலக உணவுத்திட்டத்தின் அவசர கையிருப்பிலிருந்து [illegible] இதற்கு வழங்[illegible].

பாடசாலை அதிபர்களுக்கு கோரிக்கை

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வற்புறுத்தல் வேண்டாம்

இடம்பெயர்ந்துவந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கு எந்தவிதத்திலும் பாரபட்சமோ வற்புறுத்தலோ காட்ட வேண்டாம் என யாழ் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

பாடசாலைச் சீருடைகள் மற்றும் அம்மாணவர்களின் பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்புச்சான்றிதழ் போன்ற ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு போதிய அவகாசம் வழங்குமாறும் பணிப்பாளர் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தெற்கில் 31 சிறுவர்கள்

## கடத்தப்பட்டதை ஆராய விசாரணைக்குழு தேவை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும் இச் சூழ்நிலையில் இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றங்கள் மேலும் சுமத்தப்படுவதாக பி. பி, ஸி தெரிவித்தது

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தெற்கில் 31 பாடசாலைச் சிறுவர்கள் கடத்தப்பட்டதை ஆராய விசாரணைக்குழு அமைக்க வேண்டுமென்று வழக்கறிஞர் சங்கத் தலைவர் ரஞ்சித் அபேசூரியா கோரிக்கை விடுத்திருப்பதாக அச் செய்தி தெரிவித்தது.

மேற்படி சிறுவர்கள் இராணுவத்தினராலேயே கடத்தப்பட்டனர் என்பதற்கு சிறுவர்களின் பெற்றோர்கள் ஆதாரம் வைத்திருக்கின்றனர் என சுதந்திரக் கட்சி எம். பி. நிமல் சிறிபால டி. சில்வா பி பி. ஸிக்குத் தெரிவித்தார்.

விசாரணைக்குழு அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை பல எம். பிக்கள் வற்புறுத்தி போதிலும் அரசு இன்னும் ஒரு முடிவையும் தெரிவிக்கவில்லை என பி. பி. ஸி. தெரிவித்தது.

## மத்திய கிழக்கு ஆயுதங்கள்

மத்திய கிழக்கில் சட்டவிரோதமாக ஆயுதங்களைக் கடத்திய ஜேர்மன் சரக்குக் கப்பல் ஜேர்மன் யுத்தக்கப்பலால் மத்திய தரைக்கடலில் வைத்துத் தடுக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட கவச இராணுவ வாகனங்கள் இருந்ததாக ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## மாதாந்தம் 5 கோடி நட்டம்

தோட்டங்களைத் தேசியமயமாக்கியபின்பு கடந்த இருபது வருடகாலத்தினுள் 5000கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசுடமையாக்கப்பட்ட தோட்டங்கள் மாதாந்தம் 5கோடி ரூபா நட்டத்தில் இயங்குவதாகக் குறிப்பிட்ட அவர் தனியார் மயமாக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டதற்கு இது ஒரு காரணமாயிருந்தது என்று சொன்னார்.

## இலவசக் கொப்பிகள்

தீவகத்தில் இருந்தும், குப்பிளான் பகுதியில் இருந்தும் இடம்பெயர்ந்து தீவகபாடசாலைகளில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக கொப்பி வகைகளை வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தினூடாக விரைவில்வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 15

## இஸ்ரேலின் செயற்கைக்கோள்

இஸ்ரேல் செயற்கைக்கோள் ஒன்றை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது

90 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை வலம் வரவுள்ள இச்செயற்கைக்கோள் மூன்று வருடங்களுக்கு விண்வெளியில் வலம் வரும் என ராய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அரசியல்...

யிடப்பட்ட மனித உரிமைக் குழுக்களின் அறிக்கைகளில் இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனியர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படடனர் என்றும் அவர்களுக்குப் போதியஉணவுவழங்கப்படுவதில்லை எனவும் உறவினர்கள் கைது செய்யப்படுவர் என அவர்கள் பயமுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்...

கொழும்பு சென்ற பஸ்ஸில் இருந்த பயணிகளான க சிவசிதம்பரநாதனும் இவரது மனைவி புஷ்பராணியும் இரு பிள்ளைகளும் வலத்தப்பிட்டி எனும்இடத்திலிருந்தபொலிஸ் தடைமுகாமில் மறிக்கப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர் இவர்கள் பின்னர் அருகிலிருந்த இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுக்கு என்ன நடந்தது, எங்கிருக்கிறார்கள் என்ற தகவல் இடைக்கவில்லை.

இதுபற்றி பொலிசுக்கு முறையிட்ட தர்மலிங்கம் என்ற அந்த பஸ்ஸின் சாரதி 1991 வைகாசி மாதம் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார். இதுவரை இவர் பற்றிய தகவல் எதுவும்தெரியவில்லையென அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது

கனடா...

மர்மமாகக் காணாமற் போவது போன்ற அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் ஸ்ரீலங்காவில் இன்னமும் தொடர்கின்றன.ஆனால்இதை ஏற்க ஸ்ரீலங்கா அரசு மறுக்கிறது என கனேடியக்குழு குறிப்பிட்டுள்ளது

ஸ்ரீலங்கா அரசின் இந்த போக்கு காரணமாக அந்நாட்டுக்கான உதவிகளை கனேடிய அரசு நேரடியாக வழங்கக் கூடாது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவே கனேடிய உதவி உரியவர்களுக்கு கிடைக்கஆவனசெய்ய வேண்டும் எனவும் கனேடிய அனைத்துக்கட்சிக் குழு கனேடிய அரசுக்கு சிபார்சு செய்துள்ளது.

★ பாட்டாளி மக்கள் கட்சி குற்றச்சாட்டு

# கர்நாடகதமிழ் அகதிகளுக்கு தமிழக உதவி போதாது

காவேரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக கர்நாடகத்திலிருந்து வந்த அகதிகளுக்கு தமிழக அரசு போதிய உதவி செய்யவில்லை எனப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் எஸ். ராமச்சந்திரன் நேற்றுக் குற்றம்சாட்டினார்.

தமிழக சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேசியபோது சாட்டப்பட்ட இக் குற்றச்சாட்டை வருவாய்த்துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் மறுத்துப் பேசினார்.

சுமார் ஒரு லட்சம் மக்கள் கர்நாடகத்திலிருந்து தமிழகம் வந்துள்ளனர் என்பதும், சொத்துடமைகளை இழந்துள்ள அவர்களுக்கு கர்நாடக அரசின் பாதுகாப்பு அங்கு கிடைக்கவில்லை என்பதும், மீண்டும் அங்கு செல்ல அவர்கள் அச்சப்படுகின்றனர் என்பதும் தெரிந்தவையே.

ஜனாதிபதி தேர்தல் அபிப்பிராயக் கணிப்பில்

## புஷ்ஷின் செல்வாக்குச் சரிகிறது

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் விடயமாகத் தற்போது நடைபெறும் அபிப்பிராயக்கணிப்பில் பில் கிளின்ரன் என்பவரே ஜனநாயகக் கட்சி வாக்காளர்களிடையே முன்னணியில் இருப்பதாகத் தெரியவருகிறது.

கிளின்ரனுக்கெதிராகக் கற்பழிப்புக் குற்றச்சாட்டு இருந்த போது சரிந்த செல்வாக்கு இப்போது மீண்டும் உயர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் புஷ்ஷின் செல்வாக்கு கணிசமான அளவு குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்

## இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

இந்தியாவின்ஒரு பகுதியாக காஷ்மீர் இருப்பதை எதிர்த்து காஷ்மீரிலும், பாகிஸ்தானிலும் நேற்று வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன காஷ்மீர் முஸ்லிம்களுக்கு ஆதரவாக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கமும் ஆதரவு தெரிவித்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்தியப்பிரதமரின் கொடும்பாவிகளைக் எரித்து தமது எதிர்ப்புகளை காட்டிக் கொண்டனர். காஷ்மீர் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க சர்வ ஜனவாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனையைச் செயற்படுத்துமாறு உலக நாடுகள் இந்தியாவை வற்புறுத்த வேண்டுமென பாகிஸ்தான் பிரதமர் நாவாஸ்ஷெரீப் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

## பண்ணிசைப் போட்டி

சைவ பரிபாலன சபையாரால் நடாத்தப்படவிருக்கும் பண்ணிசைப் போட்டி 9-2-92 ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும், மேற்படி போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களை சமூகமளிக்குமபடி சபையினர் வேண்டிக் கொள்கின்றனர்.

## பரீட்சைக்கு அனுமதி அட்டை

இம் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் அமைய எழுதுநர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றவிருக்கும் இடம்பெயர்ந்த போட்டியாளர்களுக்கான அனுமதி அட்டை கல்விப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது

ஏனைய போட்டியாளர்கள் விடயத்தில் இவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்படுமென்றும் இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் தெரியவருகிறது. (25)

## சொய்சாவின் மரணத்துக்கு நாடகம் காரணமா?

றிச்சார்ட் டீ சொய்சாவினால் எழுதப்பட்ட நாடகம் ஒன்றைத் தயாரித்தவரான லக்ஷ்மன் பெரேரா 1990 தைமாதம் காணமற்போனார் றிச்சட் டீ சொய்சா 1990 மாசி மாதம் வீட்டில் இருந்து ஆறு ஆயுதபாணிகளால் இழுத்துச் செல்லப்பட்டார், இருவர் பொலிஸ் சீருடையில் இருந்தனர், அடுத்த நாள் காலை அவரது உடல் கடற்கரையில் காணப்பட்டது"

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவிக்கிறது.

சொய்சா எழுதிய நாடகம் மறைமுகமாக ஜனாதிபதி பிரேமதாஸாவைக் குறிப்பிடும் நாடகம் எனவும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக செய்சா அனுப்பிய செய்திகளுக்குப் பழிவாங்கலாகவும் இருக்கலாம் என மேலும் தெரிவிக்கிறது.

இறந்தவரின் தயாரான திருமதி சரவணமுத்து தனது மகனைக் கடத்தியவர்களில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும்ஒருவர்எனக்குறிப்பிட்டார் அவர் அந்த அதிகாரியை அடையாளம் காட்ட முடியும் எனக்கூறியும்அரசுவிசாரணையைத் தொடராமல் நிறுத்திவிட்டதென அவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியது.

கைப்பற்றப்பட்ட...

- ★ ரவைகள் 2663
- ★ ரி - 56 மகஸின்கள் 07
- ★ ஜீ எம் ரவைகள் 888
- ★ ஜே, ஆர் குண்டுகள் - 05

இலங்கைக்கு...

மயமாக்கல் போன்ற சில ஆலோசனைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியிருப்பதால் அதற்கு நிதியுதவி வழங்க உலகவங்கி சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

32 ஆயிரம் கோடி ரூபாவை இலங்கை அரசு இம்முறை உதவியாகக் கோரியுள்ளது தெரிந்ததே.

மதிய...

பாத பாடசாலைகளுக்கு உணவு முத்திரைகளை வழங்க வேண்டாமென அறிக்கப்படலாமெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (15)

கண்டெடுக்கப்பட்ட...

காப்பு நிலையத்தில் தங்க நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது அதன் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவு கேட்டுள்ளது,

பளை...

களுடனான ஒரு உரப்பையும் இருக்கக் காணப்பட்டன.

சிறப்பு அடையாளமாக முதுகில் மூன்று நட்சத்திரங்களும், அதன் கீழ் கருடனும் பாம்பும், வலது பக்கத் தோள் மூட்டில் புலித்தலையும்இடது பக்கத்தில் பறவை வடிவமும் கைப்பட்டையில் சிலுவையில் அறைந்த யேசுவின் வடிவமும் பச்சை குத்தப்பட்டுள்ளன.

5 அடி 7 அங்குல உயரமுள்ள இவ்வயோதிபர் நேற்று முன் தினம் இறந்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது. அடையாளம் காண்பதற்காக பளை மருத்துவ மனையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விவரங்களுக்கு சாவகச்சேரி காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது.

## பூட்டானில் கைதிகள் விடுதலை

பூட்டான் அரசு 300 அரசியல் கைதிகளை அண்மையில் விடுதலை செய்தது

அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் பிசுபிசுத்துப் போனதை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்படுவதாக பூட்டான் அரசு அறிவித்தது.

ராணுவ—

தப்பியோடினர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து நேற்று செய்தியாளர்களிடையே பேசிய கூட்டுப் படை தலைமையகத்தைச் சேர்ந்த லெப். கேணல் சந்திரசிறி இத்தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரியும் பலியானதாகத் தெரிவித்தார். மூன்று படையினர் படுகாயமடைந்ததாகவும் உதவிக்கு விசேட கொமாண்டோ படையினர் அழைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 07

...பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் ...வனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'இல் ...வ அச்சகத்தில் ...2·1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது